ப்படும் தண்டனையானது
ாட்பாட்டையும் அடிப்படை
அங்கே பாதிக்கப்பட்டவர்
காடுமைகளின் அடிப்படை
டயில் மட்டுமே செயல்படு
கா எடுத்துக் கூறுகிறார்.

ள்ள வேண்டியது மரணத்
ஷயமாகும். மரண தண்
ம் கொலை. அது கொண்
ாரணமாய் அது பரிவர்த்
கப்படுகிறது. இத்தகைய
களை உருவாக்குகின்றன.
ஒரு தலித்தின் கொலை?
மில்லை. அப்படியொன்று
போல் சமூகம் அதைக்
ரி, விழுப்புரம், குறிஞ்சா
பற்றி இந்தச் சமூகம்
தலித்தின் கொலையை
வைகூட எழுவதில்லை.
அவர்கள் அங்கீகரிக்கப்
த ஒரு மதிப்பும் இருப்ப
கூட துர்நாற்றத்தால்
ஒரு தலித்தின் மரணம்
இதை எவ்வாறு புரிந்து

ர்ப்பு என்பது அரசு உட்
அங்கீகரிப்பைப் பெற்று
திர்ப்பதன் மூலம் ஒருவர்
டவராக எளிதில் வெளிக்
நிலை தமிழ்ச் சூழலில்
க்கெதிரான போராட்டம்
னை முறைகளை தங்கு
பதற்கு அனுமதியளிப்ப
நாம் நினைவில் கொள்
இந்தப் போராட்டத்தை
த எதிரான ஒரு விமர்
வேண்டும். அது வெகு
க் கண்டறிய நம்மைத்
து, பாதிக்கப்பட்டவரின்
gularity) நாம் விளக்கிக்
ண்கள், தலித்துகள்
நமக்குப் புலப்படும். ■


திரை
..
ம்
டுக்கு : 100 உருபா
5
601
ADVT


# இது ஒரு தண்டனை உலகம்



க. கலாமோகன்

ஜோான் ஜோனே தனது "ரோஜாவின் அதிசயம்" நாவலிலே தூக்கு மேடையை நோக்கிச் செல்பவனை அதித துணிச்சல் கொண்டவனாகத் தரிசிக்கின்றார். இந்தப் பார்வை மீதான மொழிபெயர்ப்பு இதுதான் : தண்டிப்பவர்கள் கோழைகள். சிறைச்சாலை அனுபவங்களை நிறையவே பெற்ற ஜோனேயினது வாசிப்பிற்கு அருகில் நிற்கும் என்னிடம் மரண தண்டனை தொடர்பாகப் பல அபிப்பிராயங்கள் இல்லை. ஒன்றே ஒன்று மட்டும்தான் உள்ளது. படைப்பாளி என்ற வகையிலும், மனிதன் என்ற வகையிலும் இந்தத் தண்டனையை மனிதன் மீது திணிக்கப்பட்ட சாபக்கேடாகவே பார்க்கின்றேன். தண்டிப்பவர்கள் தமது தண்டனைகளை நியாயப்படுத்த ஆவணங்களைக் காட்டலாம், சட்டங்களைத் துணைக்கு இழுக்கலாம், சமூகங்களது ஒழுக்கங்கள், ஒழுங்குகள் மீது அபிப்பிராயங்களை மூட்டைகளாகக் கட்டிக் காட்டலாம், ஆனால் இவைகளில் எதுவுமே ஓர் உயிரைத் தற்காலிகமாவது பாதுகாப்பின் அவசியம் பற்றிக் கவனம் எடுப்பதில்லை. தண்டித்தல் என்பது நீதியாகவும் விதியாகவும் உருமாற்றம் செய்யப்படும்போது – அதன் பின்னே நியாயங்கள் பல உருவங்களிலும் பல நிறங்களிலும் வரும். மரண தண்டனையின் முகம் நீதியல்ல, கொலை என்பதே எனது அபிப்பிராயம். அரசியல் கோட்பாடுகளை வலியுறுத்தும் அரசுகள் பக்கத்திலிருந்தோ, அல்லது அரசு அதிகாரத்தைக் கைப்பற்றும் நினைவோடு இயங்குகின்ற இயக்கங்கள் பக்கத்திலிருந்தோ இந்தத் தண்டனை அவசியம் எனக் கருதப்படின் இவற்றின் அரசியல் சிந்தனை கறை படிந்ததாக இருக்குமென்றே நான் கருதுகின்றேன்.

மனித குலத்தின் வரலாறு இரத்தத்தாலும் போர்களாலும் இன்றுவரை எழுதப்பட்டு வருகின்றதெனில், இனிமேலும் இப்படியே எழுதப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பது ஓர் அவசியமா? வரலாற்றின் மிருதுவான அமிசங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மோசமான அமிசங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து அரசியல் நடத்தப்படுமெனில் இது சில சமூகங்களினது அரசியல் இயக்கத்தின் மீது எங்களைச் சந்தேகம் கொள்ள வைக்கின்றது. தவறுகள் நடக்கின்றன, நடக்கும் என்பதை நாம் ஒருபோதுமே மறுதலிக்க முடியாது. ஆனால் தண்டனை – அதுவும் உயிரைப் பறிக்கும் தண்டனை – இதற்குப் பரிகாரமாக இருக்க முடியாது. இந்தத் தண்டனையை நியாயிப்பவர்கள் குறுகிய சிந்தனை கொண்டவர்களாகவும், சமூக அக்கறை அற்றவர்களாகவும், வக்கிர மனம் கொண்டவர்களாகவும், மீண்டும் மீண்டும் தவறுகளையும் குற்றங்களையும் ஊக்குவிப்பவர்களாகவுமே இருக்க முடியும்.

இன்று இந்தத் தண்டனை மீதான விவாதங்கள் உலகப் பந்தின் பல பக்கங்களில் இடம்பெற்று வருகின்றன. இந்த விவாதங்களைத் தொட்டு ஓர் நீள் கட்டுரை எழுதுவதற்கான அவகாசம் இல்லை என்பதால், எனது மறுப்பை இங்கே சில வரிகளில் தந்து, சில கவிதை வரிக ளோடு முடித்துக் கொள்கின்றேன்.

உங்களது கைகளில் நீதி உள்ளது
நீங்கள் எனக்கு நீதி தருகின்றீர்கள்
நான் இறக்கின்றேன்
நான் கொல்லப்படுகின்றேன்
நீங்கள் மீண்டும் நீதி வழங்குவீர்கள்
எவர்களுக்கு அது வழங்கப்படுகின்றதோ
அவர்களும் இறப்பார்கள், கொல்லப்படுவார்கள்.
ஆம், என்னைப்போல. . . ■